[1972 சனவரி 28

ஓலை வீடு கட்டவேண்டுமென்றாலே 1,000 ரூபாய்க்கு மேலாகிறது. எனவே, தட்டு ஓடு வீடு என்றால் 900 ரூபாயில் கட்டமுடியாது. அப்படித் தட்டு ஓடு வீடுகள் கட்டிக் கொடுத்தால் சீக்கிரம் பழுதடைந்துவிடும். 2,000 ரூபாய் அளவில் அவர்கள் வீடுகளை நல்ல முறையில் கட்டிக்கொண்டால்—தட்டு ஓடு வீடுகள் அல்லது கான்கிரீட் போட்டு வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கான முறையில்—அது சீக்கிரம் பழுது அடையாது—அதிகமான அளவில் வீடுகளைக் கட்டிக்கொள்வதைக் குறைத்தாவது நல்ல முறையிலே சிறந்த வீடுகளை குறைந்த அளவில் கட்டிக்கொடுத்தால் நல்லது அல்லவா? அதன் காரணமாக பழுதுபார்க்கும் அவசியமும் ஏற்படாதே? எனவே, அரசாங்கம் அவ்வாறு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 940 ரூபாய் அளவிற்குக் கட்டிக்கொள்கின்ற வீடுகள் சில இடங்களில் நல்ல முறையில் இருக்கின்றன. சில இடங்களிலே ஒப்பந்தக்காரர்களிடம் விடுவதின் காரணமாக குறைகள் ஏற்படுகின்றன. அல்லது பலன் பெறுகின்றவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ளாததால் பழுதடைகின்றன. பணம் போதாது என்ற வகையிலேதான் 940 ரூபாயாக இருந்ததை 1,100 ரூபாயாக ஆக்கி இருக்கின்றோம். அவர்களும் இதற்காக ஒத்துழைக்க வேண்டும். உடல் உழைப்பு மூலம் அவர்கள் இதற்கு உதவி செய்யலாம். அல்லது அவர்கள் கையிலிருந்து பணம் போட்டு நல்ல முறையிலே கட்டிக்கொள்ளலாம். எனவே, இரு தரப்பிலும் இப்படிப்பட்ட வீடுகள் ஒழுங்காக அமைவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

பல்லடம் வட்டம்

*** 78 வினா.—திரு சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பல்லடம் வட்ட ஜமாபந்தியை வரும் ஆண்டில் நீக்கிவிடும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

*** 79 வினா.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் வட்டம் என்பதை திருப்பூர் வட்டம் என மாற்றும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப உ. சண்முகம்: இல்லை.